ISSN 2320-4842

அரிமா நோக்கு
17:2 சூலை 2023

மகிழ்ச்சியைத் தேடி...
- வ. ஜெயதேவன் 03
ஆறாம் இலக்கணம்—புலமை இலக்கணம்
- த. முத்தமிழ் 05
திருவாசகத்தில் பிறப்பறுப்பு
- த. தனஞ்செயன் 10
பேராசிரியர் வே. வேங்கட ராஜூலு ரெட்டியார்
- வெ. இராம்ராஜ் 13
தேவார மூவர் நிகழ்த்திய அற்புதங்கள்
- வெ. கலைச்செல்வி 18
சங்கத் தமிழ்ப் பெண்களின் ஆடைப் பயன்பாடு
- மூ. சத்தியா 20
'திருமணம்' என்ற நிறுவனமும் சுயமரியாதை இயக்கமும்
- ச. ஜீவானந்தம் 26
பழனி முருக வழிபாடும் நாட்டுப்புற மரபுகளும்
- சீ. முத்துலட்சுமி 35
தமிழர் வாழ்வியலில் அறுகால் பறவை
- ச. சங்கீதா 38
ஐம்பெருங்காப்பியங்களில் வழிபாட்டு முறைகள்
- சு. நளினி 41
இயற்கை தந்த வரம்-இலுப்பை மரம்
- கி. ரேவதி 46

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## தாய்மொழிச் சிந்தனைகள் சில

பன்முகத்தன்மை கொண்ட நம் நாட்டுக்கு மடங்கு பல கொண்ட அச்சுறுத்தலை இன்றைய அரசியல், சமூகச் சூழல்கள் ஏற்படுத்தியுள்ளன. மீண்டும் மொழிப்போராட்டங்கள் உருவெடுக்குமோ, நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரானவை தலைதூக்குமோ என்னும் கவலை நல்லார் இதயங்களை நடுக்குறச் செய்கிறது; மக்களாட்சியம் ஆகா அறிகுறிகளோடு நாட்களை நகர்த்திவருகிறது.

எண்ணிலா மொழிகள் பேசும் குடிமக்களைக் கொண்டுள்ள இந்தியப் பெருநாட்டில், புதிய திட்டங்கள், கொள்கை, கோட்பாடுகள், அமைப்புகள், என ஒன்றிய அரசு அறிவுப்புகள் செயற்பாடுகள் யாவற்றிலும் இந்திமொழி மட்டுமே இடம்,பெறுகிறது. திட்டமிட்டு சமற்கிருதமும் நுழைக்கப்படுகிறது.

இந்தியாவில் தேசிய மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டவை 22 மொழிகள். இந்தியாவில் அசாமி, வங்காளி, குசராத்தி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, சமற்கிருதம், தமிழ், தெலுங்கு, உருது ஆகியவை தேசிய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்ட மொழிகளாக 1950இல் வெளியிடப்பட்ட எட்டாவது அட்டவணை தெரிவிக்கிறது. இந்திய அரசின் பண்பாட்டுத்துறைச் சார்புடைய சாகித்திய அகாதமி இந்தியமொழிகளில் 24 மொழிகளை ஒவ்வோராண்டும் கணக்கில் கொண்டு பரிசுக்கு உரிய படைப்புகளைத் தேர்ந்தெடுக்கிறது. பரிசு பெற்ற நூல்களைப் பதிப்பித்தும் வெளியிட்டும் சிறப்பிக்கிறது. பல மொழிகள் வளரவும் வாழவும் இம்முயற்சிகளுக்கு இடம் தரும் ஒன்றிய அரசு சுழற்சி முறையில் சட்டங்களுக்கும் திட்டங்களுக்கும் பெயர்சூட்ட ஏன் மறுக்கவேண்டும்? ஒவ்வொரு மொழிக்கும் உள்ள அறவழி உரிமைதானே அது?

சற்று ஏமாறும் தருணம் கிடைத்தால் போதும், தெருப்பெயரை இந்தியாக்கி விடுவது, அலுவலக அறிக்கையை இந்தியில் அனுப்புவது, பட்டமளிப்பு விழா உறுதிமொழியை இந்தியாக்குவது, இப்படிப்பட்ட செயற்பாடுகள் ஒன்றிய அரசின் உள்ளத்தின் உள்ளறைகளில் கறை படிந்த திட்டங்கள் இருக்குமோ என்றுதானே மக்களை எண்ண வைக்கும்? இதுபற்றிக் குரல் எழுப்பினால் இந்திய மாணவர்கள் தாய்மொழிவழி யாகக் கற்க வாய்ப்பை ஏற்படுத்த மாநில அரசுகளுக்கு அக்கறை இல்லை. இன்னும் எதற்கு ஆங்கிலம்? என்று இந்தி எதிர்ப்பை மறக்கடித்து ஆங்கில எதிர்ப்பை வலியுறுத்துகின்றன தமிழ் ஆதரவுக் கட்சிகள் சிலவும் ஆங்கில எதிர்ப்புக் கட்சிகளும்.